5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002-2003 ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Article 205 read with clause (3) of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2002-2003."

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்—ஊழியர்கள் கைது—*தொடர்ச்சி*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கை தட்டி, கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் கண்ணியத்திற்கு மாறாகவும், அவையின் விதிமுறைகளை மீறியும், கோஷம் போட்டும், உட்கார்ந்துகொண்டு தர்ணா செய்தும், அரசினுடைய நிதி நிலை என்ன என்பதை, அரசு ஊழியர்கள் பிரச்சினையில் எத்தகைய நல்ல அணுகுமுறையை அரசு மேற்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக்கூறிய பிறகும், அவையினுடைய கண்ணியத்தைப் பாதிக்கின்ற வகையில் இப்படிப்பட்ட அவை மரபை மீறிய செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக சட்டப் பேரவை உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*